**தலைப்பு - 194 - விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 செப்டெம்பர் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்ததெனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க பொதுக் கணக்கு வழிகாட்டுதல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேலும் அறிக்கையிடப்பட வேண்டிய நிதியல்லாச் சொத்துக்கள் முறையாகக் கண்டறியப்பட்டு கிரயத்திற்கு அல்லது கிரயம் அடையாளம் காணப்பட முடியாத சந்தர்ப்பங்களில், மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் கீழ் உள்ள டயகம மஹிந்த ராஜபக்ஷ தேசிய விளையாட்டுக் கழகம், சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவு மற்றும் | டயகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டுக் கழகத்திற்கு காணியை அமைச்சிடம் ஒப்படைப்பதற்கு தேவையான அளவீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அறிக்கை கிடைத்த பின்னர் கையளிப்பதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஹோமாகம பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறுதொழில் அபிவிருத்திப் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரிவைச் சேர்ந்த காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதியைக் கண்டறிந்து கணக்கு வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்திற்கான மதிப்பீடு மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் மதிப்பீட்டுப் பெறுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

### 1.6.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நுவரெலியா விளையாட்டு நிலையம் அமைந்துள்ள காணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 138 மில்லியன் வசிப்பிடங்களாகக் கணக்கிடப்பட்ட காரணத்தால் காணியின் பெறுமதி குறைவாக் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | நுவரெலியா விளையாட்டு நிலையம் அமைந்துள்ள காணிக்குரிய சீராக்கம் விரைவில் எதிர்காலத்தில் செய்யப்படுவதற்கு தேவையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் விளையாட்டுப் பாடசாலைகள், இளைஞர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 10 மில்லியன் மதிப்பிலான விளையாட்டுப் பொருட்கள் நிதிக்கூற்றுக்களில் | இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டத் தவறியிருந்ததுடன் எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளதால் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படவில்லை. | | |
| (இ) | விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கட்டிடம் ரூபா 358 மில்லியன் மதிப்பிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கட்டிடம் அமைந்துள்ள காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதந்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கட்டிடம் அமைந்துள்ள காணி அமைச்சிற்கு சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இக்காணி சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் மதிப்பீட்டு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்யப்பட முடியும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்திற்குச் சொந்தமான 3 காணிகளின் பெறுமதி ரூபா 300 மில்லியன் என்ற பெயரளவு மதிப்பில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் காணிகளாக கணக்கிடப்பட்டுள்ள போதிலும் அந்த காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதந்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்திற்குச் சொந்தமான 03 காணிகள் தற்போது சுவீகரிக்கப்பட்டிராமையால் காணியை சுவீகரிப்பதற்கான அளவீட்டு நடவடிக்கை மற்றும் குறிப்பிட்ட மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்யப்பட முடியும். | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சொத்து முகாமைத்துவம் மற்றும் சரியாக கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான ரூபா 04 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட ஜீப் மற்றும் 05 சைக்கிள்களின் பெறுமதி CIGAS சொத்துப் பதிவேட்டில் ரூபா 100 வீதம் ஆன பெறுமதிக்கு உள்ளிடப் பட்டிருந்ததுடன் மதிப்பீட்டு பெறுமதி கணக்கீடு | அரசு மோட்டார் வாகன ஆய்வாளர் / பொறியாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு சரியாக மதிபபிடப்பட்ட பிறகு உண்மையான மதிப்பைக் கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். சொத்து பதிவேட்டில் சைக்கிள் உருப்படி இல்லாததால், அது | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சொத்து முகாமைத்துவம் மற்றும் சரியாக கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மோட்டார் சைக்கிள் உருப்படியின் கீழ் உள்ளிடப்பட்டுள்ளது. சரியான மதிப்பீட்டிற்குப் பிறகு உண்மையான மதிப்புகளை உள்ளிடுவதன் மூலம் அது சரி செய்யப்படும். | |
| (ஊ) | அமைச்சிற்குச் சொந்தமான 12 வாகனங்களின் பெறுமதி சொத்துப் பதிவேட்டில் உள்ளிடப்படவில்லை. | CIGAS மென்பொருளுக்கு உள்ளிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சொத்து முகாமைத்துவம் மற்றும் சரியாக கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.3 சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| **சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10(ஆ) | வழங்குநர் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் இருப்பதில் இருந்து நேர்மையைப் பாதுகாப்பதற்கு செயல்திறன் பத்திரமொன்று பெறப்பட வேண்டிய போதிலும், வழிகாட்டுதல்களின்படி ரூபா 16 மில்லியன் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்காக செயல்திறன் பாதுகாப்பொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வழங்குநர் நிறுவனத்தினால் ஏலப் பாதுகாப்பிற்காக் ரூபா 250,000 தொகையொன்று வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த பெறுகை வழங்கப்பட்டதன் பின்னர் மேற்படி செயற்திட்டத்தின் செயல்திறன் பாதுகாபபிற்காக ரூபா 142,740 தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் , மிகை தொகையான ரூபா 108,260 விடுவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 10 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான முழுத் தொகை ரூபா 15 மில்லியன் ஆன நிதியேற்பாடு மற்றும் 10 மூலதன செலவின விடயங்களுக்கான முழுத் தொகை ரூபா 76 மில்லியன் ஆன நிதியேற்பாடு செலவிடப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. 55 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 24 மூலதன செலவின விடயங்களுக்கான நிதியேற்பாடுகள் உபயோகப்படுத்தப்பட்டதன் பின்னர் மூலதன மானியம் ரூபா 552 மில்லியன் மற்றும் மூலதன மானியம் ரூபா 808 மில்லியன் வீதம் முழுத் தொகை ரூபா 1,360 மில்லியன் ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. நிதியேற்பாட்டின் சேமிப்பு அச்செலவின விடயங்களுக்கான தேறிய ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 25 முதல் நூற்றுக்கு 97 வரையிலான வீச்சில் இருந்ததுடன் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செலவின முகாமைத்துவம் இதற்கான காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை மற்றும BD/HRD/194/16/2022 ஆம் இலக்க 2022.06.06 ஆம் தேதியிட்ட பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் எனும் தலைப்பில் தேசிய வரவு செலவுத் திட்டத்திணைக்கள கடிதத்தின் பிரகாரம் , தற்போதுள்ள அழுத்தத்தை குறைக்கும் வகையில், இந்த அமைச்சில் நிதியேற்பாடு தவிர்க்கப்பட வேண்டிய செலவீன விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதால் செலவினப் விடயங்களில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. | செயற்திறனாக பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

.

## 2.2 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 அன்று காணப்பட்ட நிர்மாணச் செயற்திட்டங்களுக்கான 2 வருடங்கள் முதல் 07 வருடங்கள் வரையான காலமாக வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 61 மில்லியன் தொகையான 42 வைப்புத்தொகைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் படி ஆண்டின் இறுதியில் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு பொருத்தமான வகையில் உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ரூபா 18,935,194 ஆன வைப்புத் தொகையிலிருந்து ரூபா 14,107,960 வைப்புக்கள் கணக்கிலிருந்து விடுவிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் கட்டுநிதி இல்லாத காலணத்தினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்தல் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அந்த வைப்புத் தொகையிலிருந்து ரூபா 390,839 தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், மேற்கூறிய வைப்புத்தொகைகளில், 16 வைப்புத் தொகைக்கான ரூபா 9,222,890 அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.<br><br>மீதமுள்ள 25 வைப்புக்கள் தொடர்பான செயற்திட்டங்கள் முறையாக முடிக்கப்பட்டுள்ளதா என்பது மற்றும் விடுவிப்பதில் காணப்படுகின்ற சிரமங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு விடுவிப்பமற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை** | | |
| (i) ரூபா 120.5 மில்லியன் வருடாந்த மதிப்பீட்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 8 செயற்திட்டங்கள் போதியளவு மூலதன கட்டு நிதியில்லாத காரணத்தினால் மற்றும் செலவு முகாமைத்துவம் தொடர்பாக வெளியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் வருடத்தில் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன. | குறித்த செயற்திட்டத்திற்கான பணிகளை மேற்கொண்டபோது 03/2022 சுற்றறிக்கையின்படி புதிய பணிகளைத் தொடங்கக் கூடாது என வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருந்தமை இதற்கான காரணமாக இருந்தது. மூலதன கட்டுநிதி போதியளவில் இல்லாததாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, நல்ல செயல்திறனுடன் மற்றும் விரும்பிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். |
| (ii) குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தில் வில் எறியும் மற்றும் துப்பாக்கியால் சுடும் மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 12 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு 2018 மார்ச் 28 ஆம் திகதி ரூபா 12 மில்லியன் ஆன ஒப்பந்த பெறுமதியில் 06 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு தனியார் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிர்வாகத்தின் பல்வேறு குறைபாடுகள் காரணமாக செலுத்த வேண்டிய தொகையை விட ரூபா 4 மில்லியன் (வரியுடன கூடிய) அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப் படாதிருந்ததுடன், மைதானத்தில் குறித்துரைத்த | ஆரம்ப கட்டத்தில் ஏற்பட்ட சிக்கல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, அமைச்சின் பெறுகைக் குழு திருத்தப்பட்ட ஒப்பந்த மதிப்பிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு அதன்படி செயற்திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரின் கோரிக்கையின்படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் காலத்தை நீட்டிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.அமன் பிரகாரம் 2020 மே 10 ஆம் திகதி முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட இச்செயற்திட்டம், பணிகள் முடிக்கப்பட்டு 2020 மே 15 ஆம் திகதி பாடசாலைக்கு ஒப்படைக்கப்பட்டது. | சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, நல்ல செயல்திறனுடன் மற்றும் விரும்பிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். மதிப்பிடப்பட்ட வேலைகளின் பெறுமதி விஞ்சப்படும்போது முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நியமத்தின் பிரகாரம் காணப்பட வேண்டிய இட அளவு தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் I ஆம் கட்டம் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வில்எறியும் மற்றும் துப்பாக்கியால் சுடும் விளையாட்டிற்காக விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த முடியாதிருந்தமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது. | மேலதிக பணிகளுக்காக முறையான அங்கீகாரம் பெறப்படாமை தொடர்பாக ஒப்பந்த நிறுவனத்திடம் மற்றும் ஆலோசனை நிறுவனத்திடமிருந்தும் எழுத்து மூலமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் II ஆம் கட்டம் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிகை 03/2000 இன் பிரகாரம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | |

**(ஆ) உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம்**

| | | |
|---|---|---|
| **(i) விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு**<br>விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர் கழகங்கள் மற்றும் விளையாட்டுப் பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்காக இந்த செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அமைச்சின் பெறுகை குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 தனியார் விநியோக நிறுவனங்களால் ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூபா 24 மில்லியன் ஆன கைப்பந்து கோர்ட், வலைப்பந்து கோர்ட், கால்பந்து கோல் கோர்ட், கைப்பந்து வலைகள், காற்பந்துகள் போன்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படாமையால் மற்றும் ஒரு நிறுவனம் ரூபா 6 மில்லியன் ஆன விளையாட்டு உபகரணங்களை வழங்க முடியாது என்று | நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் பொருட்களை வழங்கத் தவறிய சில நிறுவனங்களின் செயல்திறன் பாதுகாப்பை எடுத்துக் கொணடு டெண்டர் இரத்து செய்யப்பட்டுள்ளது. இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் இறக்குமதி செய்யப்படும் விளையாட்டுப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக ரூபா 17 மில்லியன் ஆன பொருட்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. ஆனால், 2023 ஆம் ஆண்டில், இக்கட்டளைகள் வினியோகிக்கப்பட்டு முடிக்கப்படுமென சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித் திட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிவிக்கப்பட்டமையால் மொத்தம் ரூபா 30 மில்லியன் ஆன விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படாமையால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்படவில்லை. ரூபா 17 மில்லியன் பெறுமதியான பொருட்களை வழங்குவதற்கான காலம் 1 வருடம் 07 மாதங்களை தாண்டியிருந்தது. | | |
| **(ii) பொது மக்கள் விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்** | | |
| பொது விளையாட்டு மைதானங்களின் தரமான அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்தின் கீழ 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய முடியாத மற்றும் பில்களை செலுத்த முடியாத 09 வேலைத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டு வகைப்படுத்தப்படாத செயற்திட்டங்களாக ஆரம்பிக்கப்படடிருந்ததடன் அதற்காக ரூபா 33 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால், மதிப்பிடப்பட்ட கிரயத்தை விட செயற்திட்ட பணிகளின் பெறுமதி அதிகரிததமை காரணமாக இச்செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. | 2022ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, மூலப்பொருட்களின் விலையில் விரைவான அதிகரிப்பு, மூலப்பொருட்களின் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வு காரணமாக போக்குவரத்து சிரமங்கள் ஏற்பட்டமை, வகைப்படுத்தப்படாத 09 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்படுவதற்கு மற்றும் தொடர்ந்து செயற்படுத்த முடியாமைக்கான காரணங்களாக இருந்தன. | நிர்மாண செயற்திட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| - | | |

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு தொகுதி விளையாட்டு எகடமி மற்றும் சர்வதேச விளையாட்டு அரங்காக அபிவிருத்தி செய்வதற்குரிய 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 3,866 மில்லியன் ஆன வரவு செலவுத்திட்ட மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு வழஙகப்பட்டு ரூபா 606 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ரூபா 487 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட 400 மீற்றர் செயற்கை ஓட்ட நிரல் போட்டிக்காக பங்குபற்றுகின்ற விளையாட்டு வீரர்கள் வசதியீனத்திற்கு உட்படுகின்ற வகையில் பல இடங்களில் பழுதடைந்து காணப்பட்டமை மற்றும் நிரல்கள் பிரிக்கப்பட்டிருந்த இடம் அழிவடைந்திருந்தது. விளையாட்டிற்காக பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்ற பழைய ஓட்ட நிரல் அமைந்துள்ள கேட்போர் கூடத்தின் கூரை காற்றினால் கழன்றிருந்தது. ரூபா 34 மில்லியன் செலவில் சிறிய கேட்போர் கூடத்தின் நிர்மாணத்தின் செயல்முன்னேற்றம் 90 சதவீதமாக இருந்த போதும் அதன் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மின்பிறப்பாக்கி இயந்திரம் பொருத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 30 மில்லியன் செலவிடப்பட்டு 65 சதவீத நிர்மாண செயல்முன்னேற்றம் காணப்பட்ட போதும், செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சமையலறையை திருத்தும் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நிர்மாண நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்படாமல் ரூபா 5.4 மில்லியன் முற்பணமாக செலுத்தப்பட்ட போதும் நிர்மாண

புதிய செயற்கை ஓட்ட நிரல் தற்போது விளையாட்டு நிகழ்வுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. பழைய ஓட்ட நிரல் விளையாட்டு போட்டிகளுக்கு பயன்படுத்தப்படாததுடன் செயற்கை ஓட்ட நிரல் அமைக்கப்பட்டு நீண்ட நாட்களாகிவிட்டதால், சுற்றுசூழல் பாதிப்பு மற்றும் பயன்பாட்டால் செயற்கை மேற்பரப்பு தேய்ந்து கிடப்பது வழக்கம்.

பழைய கேட்போர் கூடத்தின் ஹகூரை காற்றின் காரணமாக கழன்றிருந்ததுடன், 2023 இல் மீண்டும் அதன் புனரமைபபிற்காக நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சிறிய கேட்போர் கூடத்தின் கட்டுமானத்தின் பௌதீக் முன்னேற்றம் 90% ஆகும். ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு மட்டுமே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. மின் பிறப்பாக்கி நிறுவும் செயற்திட்டத்தைத் தொடர்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, இருதரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தை முடிப்பதற்கு அமைச்சு முடிவு செய்துள்ளது. இது தொடர்பான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய

நிர்மாண செயற்திட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. இச்செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பணிகள் நிறைவேற்றப்படாததன் காரணமாக முதலீட்டுத் தொகைக்கு எதிர்பார்த்த பலனொன்று அடையப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையை வழங்குமாறு பணிப்பாளர் நாயகத்திற்கு (பொறியியல்) தெரிவிக்கப்பட்டுள்ளது. சமையலறை சீரமைப்பு பணிக்கு முற்பணம் செலுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. குறித்த தொகையை வசூலிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் மற்றும் அதற்குரிய சிறு வணிக அபிவிருத்திப் பிரிவு, தலைமைத்துவ தேசிய மத்திய நிலையம், தேசிய விளையாட்டு அறிவியல் நிறுவனம், விளையாட்டு மருத்துவ நிறுவனம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவில் சிரேஷ்ட மட்டத்திலான 29 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்திலான 59 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்திலான 134 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்திலான 81 வெற்றிடங்களும் உள்ளிட்ட மொத்தம் 303 வெற்றிடங்கள் நிலவின. அவ்வெற்றிடங்களுள் இந்த அமைச்சின் செயல்திறனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பதவியணி பற்றாக்குறை இருந்ததுடன் , மேலும் தலைமைத்துவ அபிவிருத்திக்கான | அமைச்சின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | தேவைகளை கவனத்தில் கொண்டு குறைவாக உள்ள பதவியணிக்கு தாமதமின்றி ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

தேசிய நிலையத்தில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்/ அபிவிருத்தி ஆகிய 11 பதவிகளும் அலுவலக உதவியாளர் சேவையில் 2 பதவிகளும் மிகையாக காணப்பட்டன.